உ
கணபதிதுணை.

ஸ்ரீ விக்னேஸ்பரர் ஆதியாம் ஈச்சுர நிவேதன கீர்த்தனங்கள்.

திருக்கோணமலை
க. சோமசுந்தரம்
சொல்லியவை.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை
99, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு

துன்மதி ௵ ஆனி ௴. 1921

சாற்றுகவிகள்.

A. ALAGACONE
HUSKISSON STREET
TRINCOMALEE

திருக்கோணமலை

ஆசிரியர்

ஸ்ரீ மு. இ. நவரத்தினசிங்கமவர்கள்

சொல்லியது.

விருத்தம்.

சீராருந் திரிகோணை காராளர் குலத்துதித்தோன் திரமிளாத்தோ
டோராரு மாங்கிளமும் பயின்றவனற் கைலாய னினியமைந்தன்
பேராருஞ் சோமசுந்த்ர னிசைத்தமிழாற் பிறங்குகண பதியைப்பேணுந்
தாராருங் கொன்றையணி பரசிவத்தை யுமையவளைச் சாமிதன்னை;

சாற்றுபல கீர்த்தனங்கள் கேட்டலுமே நாரதனுந்
தன்யாழ் பார்த்தான்
போற்றுபுவி யருள்பிரமன் கைபார்த்தான் சேடனுமே
புவிக்கீ ழானான்
ஏற்றுநந்தி மிர்தங்கத் திசைசேர்த்தா னிறைவனுங்கால்
தூக்கி னானேற்
சாற்றுவர்யார் கீர்த்தனத்தி னுருசுவையைத் தரணிதனிற்
சகத்துள் ளோரே.

திருக்கோணமலை

ஸ்ரீ. சி. கதிரித்தம்பி உபாத்தியாயரவர்கள்

சொல்லியது.

வெண்பா.

சீரார் கைலாயன் சேய்சோம சுந்தரவேள்
பேரார்நற் கீர்த்தனங்கள் பேணியே—தாராருங்
கொன்றையணி யீசன் குகன்றேவி மீதணிந்தான்
நன்றாக நாளு நயந்து.

முல்லைத்தீவு

பண்டிதர்

ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள்

சொல்லியது.

வெண்பா.

அன்பா லறுகெடுத்தாய்ந் தர்ச்சனைசெய் யானந்த
வின்பா மிபமுகனை யென்றுமனத்—தின்பாற்
சிந்தனைசெய் கைலாயன் செய்தவமா குஞ்சோம
சுந்தரவேள் சொன்ன துதி.

உபோத்காதம்.

ஆற்றொணாக் கொடுந்துன்பங்களிவ்வநித்தியதேகமானதை மிகவும் வாட்டியகாலை, சீருறை தில்லைச்சிதம்பரத்தேநின்று சதாகாலமு மடியவர் வினைகளொருங்ககல நடம்புரியும் எம்பெருமானின்பாதகமலங்களைச் சிந்தையிலிருத்தி இக்கீர்த்தனங்களைச் சொல்வான் முயன்றேன். இராகசுருதி தாளக்கியானமில்லாத யான் மலையைக் கயிறாகத் திரிக்க வெத்தனித்தானைநிகர்த்து இங்ஙனஞ்சொல்லிய சத்தியகீதாவலியில் வழுமலிவுற்றிருப்பது சாத்தியம். ஆயினும் சாகித்தியபுலமையோர் அவற்றினைப் பொருட்படுத்தாது தமியனிசையைத் தம்மக்கள் மழலைமொழியெனவேற்றாதரிப்பரெனத் துணிந்தேன். என்னை?

> "குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
> கற்றறிந்த மாந்தர் கடன்."

என்பது மேதாவியர்கூற்றாதலினென்க.

க. சோ,

திருக்கோணமலை,
துன்மதி வருஷ ஆனி மீ.

ஞாபகார்த்தம்.

எம்மாசிரியர் ஸ்ரீ. மூ. இ. நவரத்தினசிங்கமவர்கட்கும், திருக்கோணமலை சிவாலயங்களில் இக்கீர்த்தனங்களைப் பாடி முற்றுவித்தற்குதவிய எமதன்பிற்குரியராம் நண்பரனைவர்க்கும் மிகுதியும் வந்தனங்கூறுகின்றேன். இக்கீர்த்தனங்கள் கிலகவருடத்துக்குமுன் சொல்லியவை.

க. சோ.

உ

கணபதி துணை.

வெண்பா.

திருவமரு மாலநிழற் சேர்தந்தி மாமுகன்றாழ்
மருவன்பி னோடு வணங்கினேன்—பொருவதிலாச்
செந்தமிழின் கீர்த்தனங்கள் செப்பச் சுவையுடனே
வந்தருள்வாய் நல்ல வரம்.

நல்லறிவு ஞானம் நவில்வென்றி நற்குணத்தோ
டில்லறத்துக் கேற்ற வெழின்மனைவி—யல்லலிலா
நல்வாழ்வு நன்மகார் நாடொற்றை மாமருப்போய்
நல்கத் தகுமிந்த நாள்.

செல்வந்தா வத்தாற் சிறக்குமறந் தான்புரியு
நல்மனந்தாசுற்றத்தார் நட்புத்தா—வல்லைதன்
ஞுதா வுனதடியை நண்ணினே னுன்னருளை
யேதோநீ யீயாத தெற்கு.

விநாயகர்பேரில்.

இராகம்—கல்யாணி. ஏக தாளம்.

பல்லவி.

தந்திமுகனேயருள்தாவையா தந்தி

அநுபல்லவி.

தந்தோமெனநடிக்குந், தாண்டவனுவந்தருளும்
மைந்தாவெனைக்காவையா, ஐயாவே தந்தி

சரணங்கள்.

மாயையாம் வாழ்வைநம்பி, மாவுலகதனில்வெம்பி
நையாதிருக்கவெனையாளையா தந்தி
ஓங்காலடியில்வாழும், உத்தமாவெனைச்சூழும்
தீங்காம்வினையையகற்றையா தந்தி
சோமசுந்தரதாசன், சொல்லுங்கவிக்கிரங்கி
நேமமுடனேயெனையாளையா தந்தி

இராகம்—பியாகு. ஏகதாளம்.

பல்லவி.

ஆனைமுகனேயென்னையாளுவாய் ஆனை

கண்ணிகள்.

ஆனைமுகத்தோனே ஆலடியுறைவோனே
அண்டியருள் வேண்டினவர்க்
கென்றும்முத்தி தந்தருளும் ஆனை

மூஷிகவாகனே மோதகஅஸ்தனே
சாமரகர்ண விளம்பிதசூத்ர
வாமனரூப மகேஸ்வரபுத்ர ஆனை

அங்குசபாசனே யாகுவாகனத்தோனே
இன்பமுடன் றுன்பந்தவிர்த்
தன்புடனே யாதரிப்பாய் ஆனை

சோமசுந்தரதாசன் சொல்லுங்கவிக்கிரங்கி
சுற்றும்வினை பற்றறவே
சித்தமுடன் முத்தியருள் ஆனை

—∘∘⁂∘∘—

இராகம்—முகாரி. ஆதி தாளம்.

பல்லவி.

ஐங்கரா வுனைப் போற்றியனுத்தேதன னுத்தே தெனனை
யாளுமிப்போதேசாமி ஐங்கரா

அனுபல்லவி.

ஐங்கராமாயையா லலைந்ததும்போதாதா
அருளாயடியேற்கின்பம் அலையாதைங்கரதேவா ஐங்கரா

சரணங்கள்.

மைந்தனுலகில்மெத்த வாடிமனங்களைத்து
நைந்தனிதமுன்பாதம் நாடித்துணைபிடித்து
நொந்துவருந்துகிறேன் நோக்கிக்கருணைவைத்து
எந்தன்பவந்தொலைக்க எதுதடையோதேவா. ஐங்கரா

நித்தமுனைநினைந்து நின்றன்சேவடிபோற்றி
அத்தவுன்னுமைநான் அனுதினமுஞ்சாற்றி
பத்தியாயேற்றிடும் பாலனெனக்கருளை
சித்தமிரங்கியீயத் தேவநீவாராயோ. ஐங்கரா

சோமசுந்தரதாசன் துதித்துக்கவியும்பாடி
நேமமுடனேயுன்ற னிருமலர்த்தாளைநாடித்
தேடித்திரிந்துநாளுந் தியங்கியேமயங்கினேன்
நாடியருள்சுரக்க நாட்டமில்லையோதேவா. ஐங்கரா

இராகம்—சுருட்டி. ஆதி தாளம்.

கண்ணிகள்.

சங்கரனார் தந்தருளும் ஐங்கரனே நீயருள்வாய்
நீயருள்வாய் நீயருள்வாய் கமலபதம் நீயருள்வாய்.
ஆலடியில் மேவுமுய ரானைமுகா நீயருள்வாய்
நீயருள்வாய் நீயருள்வாய் தாட்கமலம் நீயருள்வாய்.
பிரணவ சொரூபமுடைப் பிள்ளையே நீயாண்டருள்வாய்
ஆண்டருள்வாய் ஆண்டருள்வாய் பிள்ளையே நீயாண்டருள்வாய்
சோமசுந்தரன் பணியுந் தூயகழல் நீயருள்வாய்
நீயருள்வாய் நீயருள்வாய் தூயகழல் நீயருள்வாய்.

சரஸ்வதிபேரில்.

இராகம்—தேசிக கமாஸ். ஏக தாளம்.

பல்லவி.

வருவாயோ வாராயோ எந்தன்னுவில் தாயே
வருவாயே அம்மா வருவாயே தேவி. வருவாயோ

அனுபல்லவி.

வருவாயே அம்மாவென் மழலை மொழியைக் கேட்டுத்
தருவாயே யுன்னருள் சாற்றரு வாணியே. வருவாயோ

சரணங்கள்.

நாவினில்மேவித் தாவருள்தாயே
நயந்தெனக் குன்பதம் நாளுநற்றாயே. வருவாயோ
கலைமகள்பாரதி காட்டுபிராமியே
உலகமாதாவெனு முத்தமநாமியே. வருவாயோ
மைந்தனுஞ் சோம சுந்தரனுக்கருள்
சந்ததங்காட்டியே தயவுசெய்யாயே. வருவாயோ

நடராசர்பேரில்.

இராகம்-தன்னியாசி ஆதிதாளம்

பல்லவி.

நடனமாடினர் சதானந்தர்
நடனமாடினர். நடனா

அனுபல்லவி.

கடம்பனைத்தந்தருள் காலகாலனார்
இடும்பையகற்றிடு மெந்தைநடராசர் நடன

சரணங்கள்.

அடியார்க்கெளியவர் ஆனந்தசேகரர்
பிடிநடையம்மையை வாமத்திற்சேர்த்தவர்
சுடலையிலாடிய சோதியாமீச்சுரர்
சோமசுந்தரற்கருள் சுரக்கும்புலீச்சுரர்
தரிகிட திக்தித்தாந்தாந்
தெய்தெய்தகிந்தத்தீம்தீம்
தாம்தரிதரிகுகுஜொம்தரி
தித்தத்த திங்கிணதோமென நடன

பத்தர்க்கிரங்கியே பாவத்தைப்போக்கியே
சித்தத்தைவாட்டிடுஞ் செய்வினைநீக்கியே
முத்தியருளிடு முக்கண்ணநாதனார்
சித்திதருந் தில்லைச் சிதம்பரத்தேநின்று
தாகிடஜெம்தரிநந்தரி
தரிகிடதத்தத்தரிகிட
தரிகுகுதரிகுகுநந்தரி
தத்தத்த திங்கணதோமென நடன

தில்லைவாழந்தணர் திருமுறையோதவே
சித்தர்கணங்களுஞ் சிவசிவாவென்னவே

எல்லையிலாமலே பத்தர்கள் ஏற்றவே
இயம்புமடியர்கள் ஏத்துகள்சாற்றவே
தாகிடஜெம்தரிகிடதத்
தகதரிகிடதீம்தீம்தீம்
தந்தத்திந்திந்திந்திமி
தெய்தெய்ததிங்கணதோமென நடன-

சிவன்பேரில்.

இராகம்—காம்போதி. தாளம்-சாப்பு.

பல்லவி.

பாதந்தந்தாளுமீஸ்பரா ஓ சிவனே, சிவனே சிவனே பாதந்

கண்ணிகள்.

ஓதுவினையால்வாடி யுன்னருட்பாதந்தேடி
உருகுமெனையாளுவாய் ஓ அரனே அரனே அரனே பாதந்

தூயகழல்கள்தேடித் துயரால்மெலிந்துவாடுந்
சேயாமெனையாளுவாய் ஓ பிஞ்ஞகா பிஞ்ஞகா, பிஞ்ஞகா-பாதந்

சித்தமெலிவைப்போக்கிச் சிறக்குமருளைத்தேக்கி
முத்திதந்தாளுமையர் ஓ நித்தனே நித்தனே நித்தனே-பாதந்

தாசன்சோமசுந்தரன் சாற்றுங்கவிக்கிரங்கி
வாசக்கழல்தருவாய் ஓ சங்கரா சங்கரா சங்கரா-பாதந்

இராகம்—அம்ஸத்வனி. அடதாளசாப்பு.

பல்லவி.

பூதநாதா சம்புவே புனிதா புவிபுகழ் பாசிவ பூதநாதா

அநுபல்லவி.

மாதுபங்காளனே மான்மழுக்கரத்தோனே
ஏதுரீயிதுகாறு மிரங்காததீசனே பூதநாத

சரணங்கள்.

பந்தவினையினைச் சிந்தியகற்றுவாய்
பாண்டரங்கனே பகரீச்சுரா. பூதநாதா

சிந்தைநொந்துமே தியங்கிவாடிடும்
மைந்தனுக்கருள் தந்தையாளுவாய். பூதநாதா

சோமசுந்தரன் சொல்லுங்கவிதனை
நாடிச்செவிமடுத் தோடிவருவாயே. பூதநாதா

இராகம்—பைரவி. ஆதி தாளம்.

கண்ணிகள்.

மாயவினையினாலே வாடினேன்
மாதேவனே யுன்னடியைநாடினேன்
தூயநின்னடியைத் தாராவிடில்
சுத்தாவாராளுவர் சுத்தாவாராளுவார்.

ஆலமர்கடவுளே யாளுவாய்
அடியேனுக்குன்பத மீகுவாய்
சீலமுடன் பதந்தாராவிடிற்
சிவனேயாராளுவார் சிவனேயாராளுவார்.

காலகாலக்கபாலியேயாளுவாய்
கருதுமுன்பதத்தை யின்றீகுவாய்
சீலமுடன் பதந்தாராவிடிற்
றேவதாசனுவேனோ தேவதாசனுவேனோ.

சோமசுந்தரற்கருள் கூருவாய்
சுத்தனேமுத்தியின்றே நல்குவாய்
நேமமுடன்முத்தி யருளாவிடில்
நித்தாவாராளுவார் நித்தாவாராளுவார்

இராகம்-எதுகுலகாம்போதி. ஏக தாளம்.

பல்லவி.

அடியேனுக்கிரங்குவாய் ஐயனே ஐயனே ஐயனே— அடியேனுக்

அநுபல்லவி.

மிடியெனுங்கொடிய வேதனை வேதனை வீட்டியே—அடியேனுக்

சரணங்கள்.

சுடலையிலாடிய தேவே இப்போ
சுத்தனெனக்கிரங்கு வாயே சொலுங்
கடம்பனைத்தந்தருள் கோவே இனிச்
சாரடியேற்கருள் தாவே அடியேனுக்

சந்திரசேகர சம்போ நக்க
சதாசிவசிவசிவ நம்போ உந்தன்
மைந்தன்வினைதனை யிப்போ முற்றும்
மாற்றியருளுவாய் சம்போ அடியேனுக்

சந்ததமுன்பதந் தானே நாடிச்
சரணமென்றேயடைந் தேனே உந்தன்
மைந்தனெனக்கினித் தானே இப்போ
வருவாயருடரக் கோனே அடியேனுக்

செம்பொற்கழலிணையையேற்றித் தேவா
செப்புந்துயரதனைத் தூற்றிச் சோம
சுந்தரன்பாடுகிறான் போற்றி அதிற்
ரோஷம்வாராமற்காப் பாற்றி அடியேனுக்

இராகம்—காம்போதி. ஆதி தாளம்.

பல்லவி.

என்ன தானினிச்செய்குவேன் என் ஐயனே நான்
என்ன தானினிச்செய்குவேன் என்ன

அநுபல்லவி

இன்னலால்வருந்தியே யிடுக்கணுல்நொந்துமே
சின்மயானந்தரூபச் சிவனேயென் றுருகாமல் என்ன

சரணங்கள்

சித்தமிரங்கியுனைச் சேவிக்குமடியாராம்
பத்தர்க்கருளிடல் பாரமல்லவோவுமக் கென்ன

இந்தவிதமாகச் சிந்தைதான்நொந்திடச்
சந்ததம்விட்டிடல் சரிதானோவிறையோனே என்ன

ஆலைக்கரும்புபோல ஆகினேனுள்ளமுஞ்
சாலவருந்துதே சங்கரா அருள்தாவே என்ன

இராகம்-முகாரி ஆதிதாளம்.

பல்லவி

நமசிவாய நமசிவாய நமசிவாயவே நமசிவாய

அநுபல்லவி.

ஞமனையுதைத்து நல் மார்க்கண்டர்க்கருளிய
எமனுக்கெமனுமெங்க ளீசனுமாகிய நமசிவாய

சரணங்கள்.

உலகமதைக்குறை வில்லாமலூட்டிய
உத்தமமங்கையை யோர்பாகங்கூட்டிய நமசிவாய

பத்தர்க்கெழியனுய்ப் பாரினில் நாடியே
சித்தமிரங்கி முத்தி சிறக்கவருளிடும் நமசிவாய

சோமசுந்தரற்கருள் சுரந்துமேகாட்டி
சுத்தநிரஞ்சனப் பத்தனையாக்கிடும் நமசிவாய

இராகம்—பைரவி ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டனல்லவா உந்தன்
தொண்டனல்லவா தொண்ட

அநுபல்லவி.

பண்டைநாள்மாலயன் பாதமொடேமுடி
கண்டிடத்தேடிய கண்யகோணேசரே தொண்ட

சரணங்கள்.

அறுகொடுகொன்றையு மந்தமுளமதி
செறியவேசடைமுடி சேர்க்குங்கொணேசரே தொண்ட

பற்குனன்வில்லடி பட்டுவரமருள்
தற்பரதேவனுஞ் சாற்றுங்கொணேசரே தொண்ட

மங்கையோர்பாகனே மறலியைச்செற்றோனே
செங்கையில்மான்மழு திகழுங்கொணேசரே தொண்ட

தாமவுரியரே சர்வசன்னியாசரே
சோமசுந்தரற்கருள் சுரக்குங்கொணேசரே தொண்ட

அம்பிகைபேரில்

இராகம்—தோடி ஆதிதாளம்.

பல்லவி.

தாருந்தாருந்தாருங்காட்சியே தாயே அம்பிகையே
தாருந்தாருந்தாருங்காட்சியே தாருந்

அனுபல்லவி.

பாரினில் வாடிடும் பாலகனுக்கருள்
சீருடன்காட்டிடுந் தேவிசாம்பவியே தாருந்

சரணங்கள்.

அரனிடத்தினில் அணைவுறுமம்மையே
அடியேனுக்கருள் அன்பாயியிம்மையே
நாரிசத்தியே நவிலும் பவானியே
நாடியென்வினை தீர்பச்சைமேனியே. தாருந்

தர்மத்தின் செல்வியே சாற்றரன்றேவியே
பரைசிவையெனமேலோர் பகரப்பராவியே
முருகனைத்தந்தரு ளுமையம்மைகூவியே
நிரையாய்த்தொழுவோர்க்கு நீவரமீவியே. தாருந்

சோமசுந்தரன் துய ரோட்டிடுஞ்செல்வியே
சொலுமாயோன்றங்கையாய்த் தோற்றுநன்மெல்வியே
மலைமகளாய்வரு மாதாகபாலியே
மைந்தன்வினைதனை மாற்றுவாய்சீலியே. தாருந்

இராகம்-சுருட்டி. தாளம்-சாப்பு.

பல்லவி.

தேவிசாம்பவியேது வர்மமோ செப்பு நீ யம்மா தேவி

அனுபல்லவி

தாவியரனிடப் பக்கத்தில் மேவிடுந்
தையலே யுமைமதானுசத்தியே தேவி

சரணங்கள்.

பாசாங்குசத்தியென் றுசாரமில்லாது
பழித்துச் சொன்னேனோ அன்றி
வாசந்தரும்புழுக் கச்சியென்றேசொல்லி
வசைகள் சொன்னேனோ அல்லப்
பாசந்தரித்திட்ட பரைச்சியென்றும்மைநான்
பழிப்புச் சொன்னேனோ தக்க
ராசனின் வேழ்வியிலுமக்குற்ற நிந்தையை யிசைத்துமே
யெங்கேனுமிழுக்குகள் சொன்னேனோ. தேவி

குதிரைக்காறனைக் கூடிக்களித்திடுங்
குற்றத்தைச்சொன்னேனே அந்த
மதுரையில்யானைமுகத்தனைப்பெற்றதை
வசையாய்ச்சொன்னேனே அன்றி
மலைமடந்தைசீயென்றுமேயும்மைநான்
வசையாய்ச்சொன்னேனே அல்ல
வலைச்சியென்றேசொல்லி யிகழ்ச்சியாயெங்கேனும்
வாதுகள்சொல்லியே யேழனஞ்சொன்னேனே. தேவி

குறத்திக்குமாமியென்றே யந்தவுண்மையைக்
கூவிச்சொன்னேனே அல்ல
நிறத்திலேகரு நீலியென்றேயும்மை
நிந்தை சொன்னேனே அன்றி
மாடுகள்மேய்த்திடும் மாதவனுன்றன்
மாதுனையென்றேனே மைந்த
இடைச்சியென்றேசொல்லி யிகழ்ச்சியாயெங்கேனு
மில்லாதவார்த்தைகள் எற்றியுஞ்சொன்னேனே. தேவி

கந்தசாமிபேரில்

இராகம்—நாட்டை ஆதிதாளம்.

பல்லவி.

வேலவனே கருணைசெய் வேலவனே வேலவனே

அநுபல்லவி.

வேலவா சாற்றரும் வில்லூன்றியினில்மேவும்
விமலனேபவம் வீட்டியென்னையாளும் வேலவனே

சரணங்கள்.

ஆறுமுகத்தோனே அம்பிகைபாலனே
ஆண்டலைக்கொடி யார்த்தஐய்யாரனே
ஆண்டினேனென்னை யாதரியையபனே. வேலவனே

செவ்வேள் முருகனே சிவனருள் பாலனே
செப்புநல் வள்ளியைச் சேருயர் லோலனே
சித்தமிரங்கியென்னை யாளுவாய் சீலனே. வேலவனே

தாராரும் மார்போனே தன்னிகரில்லோனே
தாசன் சோமசுந்தரன் சாற்றுங்கவிகேட்போனே
தாதாவுன்பதந் தருவாயே சீலனே. வேலவனே

இராகம்—மோகனம். தாளம்—ரூபகம்.

பல்லவி.

அந்தமயிலுயர் கந்தனே யெனை
யாளவிது தருணமல்லவோ அந்தமயி

அநுபல்லவி.

கந்தனே வில்லூன்றி யுறைந்திடு
காதல்கொளு முருகேசனே. அந்தமயி

சரணங்கள்.

பந்தவினையினால் வாடியே மிகப்
பரிதபித்துளம் நாடியே
வந்துமலரடி தேடியே மிக
வந்தித்தேனுனைப் பாடியே அந்தமயி

பாக்கொடுனைமிகப் போற்றியே
பணிந்தேனுன்பெயர் சாற்றியே
ஆக்கும் வினையதை மாற்றியே யெனை
யாள வுனைநினைந் தேற்றியே. அந்தமயி

சோமசுந்தரன்கவி சாற்றியே
துதித்தேன் வினையதைத் தூற்றியே
நேமமுடனுன்னை யேற்றியே
நின்றுகசிந்துபதம் போற்றியே. அந்தமயி

இராகம்—பரஸ். ஏகதாளம்.

பல்லவி

இன்னுமிரங்கிலேயோ சாமிமுருகா
ஏதுசெய்குவேனினி யின்னல் வருத்துகுதே. இன்னு

அநுபல்லவி

பன்னுமிடரால்வாடிப் பகருமருளை நாடி
இன்னலகலவோட இசையுடனுனைப்பாட. இன்னு

சரணங்கள்

என்றுமுனைநினைந்து ஈண்டுபவந்தொலைய
எய்தினேனுன்னடிக்கே யின்னலகற்றியெனை
யாண்டிடவே கிருபை
யீய்ந்திடவே அபயந்
தந்திடவே இன்னு

போற்றியுனைத்துதித்துப் புலம்பிமனமிளைத்து
சாற்றினேனுன்பதத்தைத் தாராயருளெனக்கு
சண்முகனே யரன்
றன்மகனே யருள்
சுந்தரனே இன்னு

சோமசுந்தரன்கவி சொல்லிப்பதம்பணிந்து
வாசமலர்கள்தூவி வாடுமைந்தனுக்கன்பு
தருவாயே சாமி
வருவாயே முத்தி
யருள்வாயே. இன்னு

இராகம்—சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி

ஓ முருகேசா உமையவள் பாலா
உண்மையாய்வந்தெனை யாள்கதிரேசா. ஓமுரு

அநுபல்லவி

தா முருகையனே தாளிணைக்கமலமே
தஞ்சமயின்மீதேறிச் சாமிவந்தெனையாளும் ஓ முரு

சரணங்கள்

மாமயிலிவர்வோனே மாயனன் மருகோனே
மைந்தன் றுயர் அந்தமுற வந்தெனை யாண்டருள்வாய். ஓ முரு

பன்னிருகையோனே பச்சைமயில் வாகனனே
இன்னலற வந்தெனை யிப்பொழுதே யாட்கொள்ளுதி. ஓ முரு

சூரனைச்செற்றோனே சுரர்துன் பொழித்தோனே
சோமசுந்தர னீடுபெறத் தோகைமயின் மீதுவாராய். ஓ முரு

இராகம்-கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி

காட்சியிது காட்சி வில்லூன்றிக்கந்தர்
கனகத்தேரேறிய கண்காட்சி. காட்சி

அநுபல்லவி

ஆச்சிவிசாலாட்சி யருளும்வடிவேலர்
காட்சிதந்தருள் கந்தர் கவரிபவனிவருங் காட்சி

சரணங்கள்

இலகுமுலகிலுள்ள வின்பகீதாங்கத்தோடு
ஏகமாய்ப்பத்தர்கள் ஏற்றிப்பின்செல்லவே
சீலமுடனடி தேடிப்பவந்தொலை
சேருமுன்னடியர்கள் செயசெயவென்னவே
செய்யதாளங்கள் தம்மொலிகாட்டவே
சித்தமொடுபத்தர் தேவாரஞ்சாற்றவே காட்சி

மொந்தைபேரிகையொடு மொழியுமாகுளிகளுஞ்
சிந்தையுருக்கொலி செய்யசல்லரிகளுந்
தம்புருவீணையின் தாரைசின்னங்களுந்
தாவுதுடிசுரம் சாற்றுகுழல்களும்
பகருகிணையுடன் பதலைதூரியங்களும்
பக்கமதிலொலி காட்டிப்படரவே காட்சி

சோமசுந்தரனுடன் சொல்லுமடியரும்
வாமமேகலையுள மங்கையர்கூட்டமும்
ஓமமூட்டிடு முத்தமர் கூட்டமும்
நாமம்பலதுமே நவின்று போற்றியும்
நாட்டமுடன்ரதப் பக்கத்தில் நின்றுமே
ஓட்டமசைவுற உச்சரித்தேவர காட்சி

இராகம்-காப்பி. ஏகதாளம்.

பல்லவி

மாமயிலாளனே பதந்தருவாய் கந்தா வருவாய்
முருகாவருவா யெனை யாளுவாய் மாமயி

கண்ணிகள்

உமையவள் பாலனே உறும்பிணிபோட்டியே
உனதடியனுக்கின்ப முவந்தருளாயோசாமி
உமைபவமாற்றுயோ மாமயி

பந்தவினையேமுடிப் பாலனயர்ந்தேதன் வாடிச்
சுந்தரவேலனே சூழ்வினை மாற்றுயோ
துயரமுந்தீராயோ மாமயி

வள்ளிதெய்வயானை மகிழ்ந்துமே மேவத்
துள்ளுமயின்மீதேறிச் சுந்தரா வாராயோ
துயரமுந்தீராயோ மாமயி

சோமசுந்தரன்கவி சொல்லிநான்பாட
நாமம்பலவுள நாதனே வாராயோசாமி
நயந்தெனையாளாயோ மாமயி

இராகம்-தேசிகதோடி. ஆதி தாளம்.

பல்லவி.

கந்தசாமியே முருகா வந்திமுத்திதாருமே. கந்த

கண்ணிகள்.

கந்தாகந்தாகந்தனே கழறுந்தண்டைக்காலோனே
கருதும்வள்ளிகாந்தனே காட்டுஞ்சாமிநாதனே. கந்த

புலவாபுலவாபுலவோனே புகலும்வேலுக்கிறையோனே
பொருதிக்குன்றைப்பிளந்தோனே போற்றுஞ்சாமிவேலனே
கந்த

ஆசாறுசாறுசானே அடியார்க்கருளும்மனத்தோனே
அறையுங்குறிஞ்சிவேந்தனே யரனுக்கருமைமைந்தனே. கந்த

சாமிசாமிசாமியே சாற்றுமாயோன்மருகோனே
தாசன்சோமசுந்தரன் தனையாள்கார்த்திகேயனே. கந்த

இராகம்-மோகனம். ஏக தாளம்.

பல்லவி.

வேலாவுமைபாலாகுணசீலா வெனையாள். வேலா

அநுபல்லவி.

வேலாசரவணபவசாமி விளங்குமாதுமையாளின்
பாலாவெற்பைப்பிளந்தோனே பகரும்பதந்தந்தாள்வாயே. வேலா

சரணங்கள்.

வள்ளியைப்புனத்தினிடை மருவிமணந்தோனே
துள்ளுமயின்மீதிவர் சூரசங்காரனே
கங்கையிற்பிறந்துவளர் கந்தசாமிநாதனே
செங்கையில்வேலேந்துஞ் செப்புசிலம்போனே
பத்தர்பணிபாதனே சித்தியருள்நாதனே
முத்திதருவேலனே இத்தரையிலீசனே. வேலா

இடரையகற்றியெனக் கின்பமருள்வேந்தனே
சுடரைநிகர்சோதியே சுப்ரமண்யதேவனே
தெய்வயானைகாந்தனே சேய்கார்த்திகேயனே
மொய்முகற்கிளேயோனே முழுதொருங்குணர்வோனே
காசிநாதன்மைந்தனே மாசிலாதவேந்தனே
காசில்வரந்தந்தோனே பேசுதமிழீந்தோனே. வேலா

பத்தியாயண்டினோர்க்குச் சித்திகொடுத்தாளுவாய்
நித்தனிடமேவிடுஞ் சத்திதந்தருளுவாய்
சுத்தனெனவந்தடையுஞ் சுந்தரற்குதவுவாய்
முத்தர்கட்கபயமென முத்திதந்தாளுவாய்
கங்கைமைந்தவேலனே கார்த்திகேயசீலனே
மங்கையுமைபாலனே நங்கைவள்ளிகேள்வனே. வேலா

தேவிநாமாவலி.

இராகம்-பியாகு. ஏக தாளம்.

1. அம்பாளம்பா ளம்பாளே
யருள்வாயெனக்குன் னிருதாளே.
2. அம்பிகையாவர்க்கும் நல்லவளே
அடியார்க்கருளிட வல்லவளே.
3. அம்பிகையன்னையே யுணைநாடி
அழுதுமெலிதலுன் னருள்தேடி.
4. அம்பாள்வெளிவரு மருங்காட்சி
ஆகுமெமது வினைமீட்சி.
5 அரனிடமேவிடு மம்பாளே
யருள்வாயெனக்கு நல்வாழ்வே.
6. ஆச்சியெனக்குன் பாதமதை
யருள்வாய்கருணை தினம்வைத்தே.
7. ஆனந்தத்தேனே யரும்பொருளே
அம்பிகையெனச்சொலு நற்பொருளே.

8. இன்பமருள்வாய் எந்தாயே
எனக்குன்பதந்தா நற்றாயே

9. ஈஸ்வரியெனச்சொலு நற்பொருளே
இயம்பவரிதா மரும்பொருளே

10. உலகிலுயர்வாம் பதந்தேடி
யுருகியலைதலுன் னருள்தேடி

11. ஊழ்பிணியாவையுந் தீர்ப்பாயே
உனதடியணையின்பஞ் சேர்ப்பாயே

12. என்பவமகல வருள்தாயே
இன்பப்பதந் தாள்வாயே

13. ஏத்தித்துதிகள் மிகச்சாற்றி
யிசைத்தேனுந்தன் பதம்போற்றி

14 ஐயையெனுஞ்சிவை யாரணியே
அடியேன் றுயர்தவிர் பூரணியே

15. ஒற்றைமருப்போ னுயர்தாயே
உன்னடியெனக்கருள் நற்றாயே

16. ஓதும்வினைகள் தனையோட்டி
உறும்பிணிதீர்ப்பா யருளீட்டி

17. ஔவியமில்லா மனந்தாவே
ஆட்கொண்டடிய னெனைக்காவே.

18. கண்டத்தில்நஞ்சை யானுக்கே
காட்டிமறைத்தனை நன்மைக்கே.

19. கற்றவர்போற்றுங் கபாலியே
கருதும்பதந்தா சிவியே

20. கந்தனைத்தந்தருள் நல்மாதா
காட்டுமருடனைத் தா தா தா

21. சண்முகவள்ளலைத் தந்தாயே
தருவாய்பதமெனக் கெந்தாயே

22. சாம்பவிதேவியாஞ் சத்தியே
தருவாயெனக்குன் முத்தியே.

23. சிவகாமசவுந்தரி தேவியே
செப்பும்பதந்தனை யீவாயே.

24. சித்தத்துட்டித்திக்குந் தெள்ளமுதே
சிவமதைத்தானடை நல்லமுதே.

25 சொல்லருஞ்ஞான சவுந்தரியே
சூழும்வினைதனைச் சங்கரியே.

26 தருமத்தின்செல்வியே தாயாரே
தருவாயெனக்கு நற்பேறே.

27. தையல்நாயகி தாயாமே
சாற்றுஞ்சண்முகன் சேயாமே.

28. நாடும்பொருளாம் நாயகியே
நவிலும்பதந்தா நாயகியே.

29. நாமஞ்சொலித்தொழ லானந்தம்
நாடிப்பயன்பெற லானந்தம்.

30. நாரியெனவுரை போதினியே
நடராசர்பக்கத்து நன்மணியே.

31. பரமனார்பக்கத் துறுமயிலே
பாதந்தருவாய் மடமயிலே.

32. பரைசிவையெனப்பகர் பார்ப்பதி
பகருங்காமக் கோட்டத்தி.

33. பத்தர்புகழ்பச்சை மேனியே.
பதந்தந்தாள்வாய் பவானியே.

34. பத்தர்கள்காண்பது வானந்தம்
பாடியுருகுத லானந்தம்.

35. பரமானந்தன் பக்கமதில்
பார்ப்பதிதேவி திருமதியம்.

36. பார்ப்பதிதேவியே பாராயோ
பாவவினைதனைத் தீராயோ.

37. பாவவினைதனை யோட்டியே
பதந்தாவுன்னரு ளீட்டியே.

38. பாடப்பாடப் பலனுண்டாம்
பத்தியேற வீடுண்டாம்.

39. மலைமகளெனச்சொலு மாதாவே
மாசில்பதந்தனைத் தான்தாவே.

40. மாயோன்றனக்குத் தங்கையே
மாதேவபக்கத்து நங்கையே.

41. மாசிலாமணியெனு மாமணியே
மாதாசாம்பவி மனோன்மணியே.

42. வாசமலர்கள் தான்றூவி
வாடியலைதனுன் னருள்மேவி.

43. வித்தகர்போற்றிடும் நன்மணியே
விளங்குசிவையெனு விண்மணியே.

44. விசாலாட்சியம்மையே வாவாவா
விளங்குகழல்தா வாவாவா.

45. அம்பிகையம்மையே வாவாவா
அடியனுக்கருடா வாவாவா.

46. சாம்பவிதேவியே வாவாவா
சாற்றும்பதந்தா வாவாவா.

47. போற்றும்பதந்தனைத் தாதாதா
புவிபுகழ்கருணையைத் தாதாதா.

48 சிவகாமவல்லியே வாவாவா
செம்பொற்கழல்தா வாவாவா.

49. புகலருநாமங்கள் தான்சாற்றி
புகழ்பெறுபாதங்கள் தான்போற்றி.

50. சோமசுந்தரன் பாடியே
துதித்தேனுன்னருள் நாடியே.

இராகம்-கமாஸ். ஏக தாளம்.

1. சீரடைந்தேயின்பமுற அம்மணியேநான்
சேவித்துவேண்டுகின்றேன் அம்மணியே.

2. வீடதனைத்தானடைய அம்மணியேநான்
விருப்பமுற்றுத்தானடைந்தேன் அம்மணியே.

3. நடராசர்பக்கலுறு மம்மணியேநான்
நாடினேனுன்பதத்தை யம்மணியே.

4 பாவவினைதீர்த்தருள்வாய் அம்மணியேநல்ல
பதத்தைதயெனக்கருள்வாய் அம்மணியே.

5. முத்தியடைந்தின்படைய அம்மணியேநான்
முயற்சித்துவாடுகின்றேன் அம்மணியே.

9. என்னையறிந்தீடேற அம்மணியேயெனக்
கிசைந்ததெல்லாந் தந்தருள்வாய் அம்மணியே.

7. இடரால்வருந்துகின்றேன் அம்மணியே அந்த
இடரையகற்றியருள் அம்மணியே.

8. வாடியலைந்தலுத்தேன் அம்மணியே அந்த
வாட்டத்தைத்தீர்த்தருள்வாய் அம்மணியே

9 முருகனைத்தந்துதவுமம்மணியேயென்
மூழும்வினைமாற்றி யருள் அம்மணியே.

10. நல்வரமும்நற்பயனும் அம்மணியே
நயந்துதவ லுன்கடனும் அம்மணியே.

11. சாம்பவியெனுஞ்சிவையாம் அம்மணியே
சலிப்பில்லாவாழ்வுதவு மம்மணியே.

12. நாடியுனையடைந்தேன் அம்மணியே
நாட்டமுடன்முத்தியருள் அம்மணியே

13 சிவகாமசவுந்தரியாம் அம்மணியே
செம்பொற்பதந் தந்தருள்வாய் அம்மணியே

14. மாதவனார்சோதரியாம் அம்மணியே
மாசில்முத்திதந்தருள்வாய் அம்மணியே

15. மாசில்மணியென் றுரைக்கு மம்மணியே
மனதுகசிந்தின்புதவு மம்மணியே·

இராகம் - சகானா அட தாளம்

1. அம்பிகைவந்தாளென் றா தூ தூசங்கே
அபயந்தருவாளென் றா தூ தூசங்கே
2. அரனிடத்திருப்பாளென் றா தூ தூசங்கே
அடியார்க்கருள்வாளென் றா தூ தூசங்கே
3. அங்குசந்தரித்தாளென் றா தூ தூசங்கே
அருள்வாள்பதமெமக்கென் றா தூ தூசங்கே
4. ஆச்சிவிசாலாட்சியென் றா தூ தூசங்கே
அருள்வாள்நல்முத்தியென் றா தூ தூசங்கே
5. இன்பந்தருவாளென் றா தூ தூசங்கே
எமையாண்டருள்வாளென் றா தூ தூசங்கே
6. ஈஸ்வரிதாயிவளென் றா தூ தூசங்கே
இருவினைகள்தீர்ப்பாளென் றா தூ தூசங்கே
7. உலகத்தின்மாதாவென் றா தூ தூசங்கே
உறும்பிணிகள்தீர்ப்பாளென் றா தூ தூசங்கே
8. ஊழ்வினைதவிர்ப்பாளென் றா தூ தூசங்கே
உறுமிடிகள்தீர்ப்பாளென் றா தூ தூசங்கே.
9. எம்பவந்தொலைப்பாளென் றா தூ தூசங்கே
எமக்கின்பமீவாளென் றா தூ தூசங்கே,
10. காட்சிதருவாளென் றா தூ தூசங்கே
கடம்பனைத்தந்தாளென் றா தூ தூசங்கே.
11. சாம்பவிவந்தாளென் றா தூ தூசங்கே
தருவாள்பதமெமக்கென் றா தூ தூசங்கே.
12. சிவகாமிவந்தாளென் றா தூ தூசங்கே
சேர்ப்பாள்நல்முத்தியென் றா தூ தூசங்கே.
13. சிவகாமவல்லியென் றா தூ தூசங்கே எம்
பவநாசஞ்செய்வாளென் றா தூ தூசங்கே
14. தேவியுமைதானிவளென் றா தூ தூசங்கே
தேடும்பொருள்தானிவளென் றா தூ தூசங்கே.

15. நல்லவரந்தந்தாளென் றூதூதுசங்கே
நயந்தின்பமீவாளென் றூதூதுசங்கே

16. பத்தர்க்கருள்வாளென் றூதூதுசங்கே
பரன்பக்கத்திருப்பாளென் றூதூதுசங்கே

17. பார்ப்பதிதேவியென் றூதூதுசங்கே
பாதந்தருவாளென் றூதூதுசங்கே.

18. மாசிலாமணியிவளென் றூதூதுசங்கே
மாசில்பதந்தருவாளென் றூதூதுசங்கே.

19. முருகனைத்தந்தாளென் றூதூதுசங்கே
முத்திதருவாளென் றூதூதுசங்கே

20 வாசவனார்சோதரியென் றூதூதுசங்கே
வாட்டத்தைத்தீர்ப்பாளென் றூதூதுசங்கே.

திருச்சிற்றம்பலம்.